## முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

## O.S. No. 292/2012

**Witness DW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புட்லாய் | தொழில் | |
| க/பெ | இருசன் | வயது | |
| ஊர் | | தேதி | 22.01.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (22.01.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தின் உள்ள விவரங்களை நான் சொல்லியதன் பேரில் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த வழக்கினை எதற்காக தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது மண்ணில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர். யார் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் பெரியநாயகம் எனது நாத்தனார் தாக்கல் செய்துள்ளார். எத்தனை இன சொத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் 5

செண்ட் மனைக்காக தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கிற்கு நான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். முருகன் என்பவர் எனது மூத்தாரின் மகன். அஞ்சலை என்பவர் எனது மூத்தாரின் மனைவி, பார்வதி என்பவர் எனது மூத்தாரின் மகள். 5 செண்ட் மனையின் அளவீடுகள் மற்றும் ஜக்குபந்தி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு 1976 ம் வருடம் திருமணம் நடைபெற்றது. அஞ்சலை மற்றும் பெரியநாயகம் அம்மாள் ஆகியோருக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/- M.S. Varalakhmi)
I Additional Subordinate Judge,
Villupuram